பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 20 புதன்கிழமை 06.11.2024 கதிர் 364

# ஆசனம் கிடைக்காதோர்தான் கூட்டமைப்பை உடைத்தார்கள்

## சுமந்திரன் விளாசல்

தேர்தலில் ஆசனங்கள் வழங்கப் படவில்லை என்று வெளியேறியவர்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்தார்கள். அத்தகையவர்கள்தான் இப்போது தமிழ் அரசுக் கட்சி குறித்தும் விமர்சிக்கிறார்கள் என்று அந்தக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்ற ஆசனத்திற்காக முதலிலே உடைத்தவர்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்தான் (தமிழ்தேசியமக்கள் முன்னணியினர்). 2010ஆம்ஆண்டு ஜனாதிபதிதேர்தல்நடைபெற்றபோது சரத்பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதாகக்கூட்டமைப்பு முடிவுஎடுத்தது. அந்த முடிவு எடுக்கப்பட்டபோது சம்பந்தன் அமர்ந்திருக்க மாவை எழுந்துநின்றுமுடிவினைஅறிவிக்கின்றார். அந்த முடிவு எடுக்கப்பட்டபோது கஜேந்திரகுமார்பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், சுரேஷ்பிரேமச்சந்திரன், சிவசக்திஆனந்தன்ஆகியோர்இருந்தனர். அவர்களும்அதற்கு ஆதரவேஇருந்தனர்.

சரப்பொன்சேகாவுக்கு ஆதரவாகக் கூட்டமைப்பு நடத்திய பொதுக் கூட்டங்களில் பிரசன்னமாகிஆதரவுதிரட்டினர். 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் பின்னர்தான் தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பிலிருந்துவெளியேறியது. அவர்கள் கோரிய ஆசனங்கள் ☞ 2

## தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவை நாடாது ஜேவிபி

### ரில்வின் சில்வா அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் பேச்சு நடத்தவில்லை. நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவர்களின் உதவியை கோர வேண்டிய அவசியம் ஏற்படாது. தமிழ் ☞ 8

இனி இது ரகசியம் அல்ல!

தெற்கில் சிங்கள அரசியலுக்குள் புலம் பெயர் தமிழ் முதலாளிகளின் தலையீடு தொட்பில் தொடர்ந்து கடும் விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டுக்கொண்டே ☞ 2



## தயாசிறியின் வட்ஸ்அப் ஹேக் செய்யப்பட்டது

முன்னாள்பாராளுமன்றஉறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் வட்ஸ்அப் கணக்கும் ஹக் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற

தனது வாட்ஸ்அப் கணக்கு நவம்பர் 3 இரவு முதல் ஹக் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தனது கணக்கை ஹக் செய்தவர்கள் தமது நெருங்கிய நண்பர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவை அவசரமாக வைப்பிலிடுமாறு கேட்டுள்ளதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். ☞ 8

### டியாகோ கார்சியாவிலிருந்து

## இலங்கை ஏதிலிகள் 60 பேர் பிரிட்டனில் குடியேற அனுமதி

பல வருடங்களாக டியாகோ கார்சியா தீவில் கைவிடப்பட்டிருந்த இலங்கை ஏதிலிகள் அனைவரும் பிரித்தானியாவில் குடியேறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பி.பி.சி வெளியிட்டுள்ள செய்தியில், குறித்த தீவில் தங்கி இருந்த 60 இலங்கைத்தமிழர்கள் 3 ஆண்டுகளின் பின்னர் தற்போது பிரித்தானியாவில் தங்க அனுமதிக்கப்படவுள்ளனர்.

இந்த தீவிலிருந்து ☞ 8

# தேசிய மக்கள் சக்தியினருக்கு மட்டுமே அமைச்சு பதவிகள்

## முல்லைத் தீவில் பிரதமர் திட்டவட்டம்

**தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றிபெறுவோருக்குமாத்திரமேஅமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

**முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.**

**போர் காரணமாகவே வடக்கு மக்களுக்கும், தென்னிலங்கை மக்களுக்கும் இடையிலான தொடர்பாடல் இல்லாமல் போனது. போர்க்காலங்களில்தென்னிலங்கை மக்கள் வடக்கினை ஒரு போர்க் களமாகப் பார்த்ததுடன், வடக்குதமிழ்மக்கள்தங்களது தென்னிலங்கைசிங்களமக்களைதங்களது எதிரிகளாகப் பார்த்தனர்.**

**இதனூடாகஅரசியல்வாதிகளேஅதிகளவில் நன்மையடைந்தனர். அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளையும் போர் ஏற்பட ஏதுவாக இருந்த பிரச்சினையையும் தீர்க்க முடியாதவர்களால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.**

**தற்போது, மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமையளித்து சேவை செய்யக்கூடிய நாடாளுமன்றமொன்றை அமைக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதேநேரம், கடந்த காலங்களில் மக்களுக்கு** ☞ 2

## மஸ்தானுக்கு எதிராக முறையீடு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானுக்கு எதிராகத் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.


தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணான வகையில் வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றமை தொடர்பிலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் உரிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## ஜயவர்த்தனபுர பல்கலை மாணவர்கள் போராட்டம்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் சங்கம் கொழும்பில் நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் கொழும்பு, விகாரமகாதேவி ☞ 2



## யாழ்ப்பாணத் தலைமைகளின் நரித் தந்திரத்தை புரிந்துகொள்க

### அம்பாறைத் தமிழர்களுக்கு பிளையான் அழைப்பு

யாழ்ப்பாணத்தலைமைகளின்நரித் தந்திரத்தை அம்பாறை வாழ் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களின்எடுபிடிகளுக்குதகுந்தபாடம் கற்பிக்க உறுதிஎடுக்கவேண்டும். கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத் தலைமைகள் இங்கேநிராகரிக்கப்பட்டனர்என்றுதமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான ☞ 2

## அமைச்சரவைப் பத்திரத்தையே சமர்ப்பிக்க தெரியாதவர் ஹரிணி

### ரணிலோடு முரண்படக்கூடாது என்கிறார் சாகல

அமைச்சரவைபத்திரம்சமர்ப்பிக்கும்நடைமுறை தெரியாமல் இருக்கும் பிரதமர் ஹரிணி, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ரணில் விக்ரமசிங்கவுடன் முரண்படுவதில் எந்தப் பயனும் இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அரச நடைமுறைக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதாகும். அதன் பிரகாரமே அரச ஊழியர்களின் சம்பள ☞ 2

## சசிகலாவின் வான் மீது கல்வீச்சுத் தாக்குதல்

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் பயணித்த வாகனம் (வான்) மீது இனம் தெரியாத நபர்கள் கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்

தனது வீட்டில் இருந்து நேற்று மாலை பரப்புரைப் பணிகளுக்காக பயணித்த போது வாகனம் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் சசிகலா முறைப்பாடு செய்துள்ளார். காரில் சசிகலா ரவிராஜ் இருந்த போதிலும் காயங்கள் எதுவும் இன்றி தப்பியுள்ளார்.

அதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் சசிகலா ரவிராஜ் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளும் அயல் வீட்டுப் பெண்ணினால் கற்கள் வீசி உடைக்கப்பட்டன.

## இனி இது .....

இருக்கின்றன. இப்போது 'அரகலய' போராட்டத்தின் இறுதியில் வன்முறைகளின் பின்னணியிலும் இந்தப் பெரு முதலாளிகளின் பணமே இருந்தது என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த வர்த்தகர் நிரங்க இந்திரஜித் ஹெட்டியாராச்சி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். கட்சிகளை வாங்கியும், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணத்தால் வாங்கியும் மீண்டும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த இவர்கள் முயற்சிக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்தார்.

செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்த கருத்துக்களின் சராம்சம் வருமாறு:

2022ஆம் ஆண்டு மக்களால் உருவான இயற்கையான போராட்டத்தினைக் கொண்டு நாட்டில் அராஜாக நிலைமையை உருவாக்குவதற்காக சுபாஸ்கரன் அல்லிராஜா நேரடியாகப் பணத்தைப் பயன்படுத்திய முறைமை சம்பந்தமாக என்னால் பொறுப்புடன் சில தகவல்களை வெளிப்படுத்த முடியும்.

போராட்டம் ஏப்ரல் 9 ஆரம்பமாகியது. அதற்கு முன்னர் சில விடயங்கள் இடம்பெற்றிருந்தன. மார்ச் மாதத்தில் அந்த விடயங்களை நிறுத்தி நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இருப்பினும் சுபாஸ்கரன் அல்லிராஜாவின் பணத்துக்கு அடிமைப்பட்டமையால் அந்த சந்தர்ப்பம் அற்றுப்போனதாகவே நான் பொறுப்புடன் இங்கு கூறுகின்றேன்.

நான் அவ்வாறு கூறுவதற்கு காரணம் உள்ளது. ஏப்ரல் மாதம் 3 ராஜ்சங்கர் பாலசிங்கம் என்பவரிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் சுபாஸ்கரன் அல்லிராஜாவின் இங்கிலாந்தில் உள்ள லைக்கா மொபைல் நிறுவனத்தில் முன்னாள் தலைமை நடவடிக்கை அதிகாரியாகச் செயற்பட்டவராவார். அவர் என்னைத் தொடர்பு கொண்டு விசேட தகவலொன்றை பரிமாற்றவேண்டியுள்ளதாக கூறினார்.

அதன்போது மூன்று நபர்களின் பெயர்களை அவர் குறிப்பிட்டார். அதில் இருவரை நான் நேரடியாகச் சந்தித்துள்ளேன். அவர்களை நான் நன்கு அறிவேன். மூன்றாவது நபரை நான் அறியவில்லை. அவர் கூறிய அந்த மூவரே ஏப்ரல் மாதம் பணத்தைக் கொண்டு போராட்டத்தினை வழிநடத்தினார்கள். மக்களிடத்தில் பணம் இல்லை. உண்பதற்கே பணம் இல்லை. ஆனால் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு தீ வைப்பதற்கு பணம் எங்கிருந்து வந்தது? பெற்றோல், டீசலை வாங்குவதற்கு எவ்வாறு பணம் இருந்தது என்பதை நேரடியாகத் தேடவேண்டியுள்ளது.

சுபாஸ்கரன் விடயத்தில் முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அமைதியாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் அனைவரும் பணம்பெற்றுள்ளனர். கடந்த நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களில் 75 சதவீதமானவர்கள் சுபாஸ்கரனிடம் பணம்பெற்றுள்ளனர் அதனால் அவர்கள் அமைதியாக உள்ளனர். ஆகவே ரஞ்சன் ராமநாயக்கவை மட்டும் திட்டுவதால் பயனில்லை. 500 மில்லின் ரூபாய் போராட்டகாலத்திலேயே தலைவர்கள் மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தினை ஏன் வழங்கினார்கள் என்றால், சுபாஸ்கரன் என்கிற பெயரை நாட்டுக்குள் அதியுச்சமான அளவில் பதிவு செய்வதற்குஆகும். அதன் மூலமாக நாட்டிற்குள் அவர் மக்கள் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு வழிசமைத்தார்கள். நாட்டின் அதிகார மையத்தினை தக்கவைத்துக்கொள்வதுதான் இவர்களின் நோக்கமாகும். அவ்வாறு தக்கவைத்துக்கொள்வதால் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள அவரது வழங்குகள் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

அந்தவகையில் பத்து முதல் பதினைந்து வரையிலான உறுப்பினர்களை இம்முறை நாடாளுமன்றத்திற்கு அனுப்பவதற்கு முயற்சிக்கின்றார். இதன் மூலமாக ஏனையவர்களை விலைக்குவாங்கி இணைத்துக்கொள்ள முடியும் என்றும் கருதுகின்றார்.

நாடாளுமன்றத்தில் அவரது குழுவொன்று வருகைதருவதால் நாட்டில் மீண்டும் ஸ்திரமற்ற நிலைமையொன்று உருவாகும் என்றே கருதுகின்றேன். அதனால்தான் அதுபற்றி வெளிப்படுத்துவதற்கு நான் முன்வந்துள்ளேன். உலகப்போர் நெருங்கியுள்ள நிலையில் உள்நாட்டில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டால் பங்களாதேஷின் நிலைமைதான் இந்த நாட்டில் ஏற்படும்.

போராட்டங்களால் என்னைப்போன்ற பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே அவ்விதமான நிலைமையை மீண்டும் ஏற்படுத்தவதற்கு இடமளிக்கக் கூடாது - என்றார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதனையும் செய்யாதவர்கள் தற்போது தேர்தல் காலத்தில் மக்களிடம் சென்று தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதாக கூறிவருகின்றனர்.

எவ்வாறாயினும், தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றிபெறுவோருக்குமாத்திரமே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்றார்.

## ஜனவர்த்தனபுர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூங்காவிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பேரணியாகச் சென்றனர்.

பல்கலைக்கழக மாணவர் சங்கங்களை ஒடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு செயற்திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடையை நீக்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 6 மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பு மற்றும் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு உதய செனவிரத்ன குழு அமைக்கப்பட்டது.

அரச ஊழியர்களுக்கு நூற்றுக்கு 24 சதவீத சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படவேண்டும் என அந்த குழு பரிந்துரைத்திருந்தது. என்றாலும் அந்தளவு சம்பள அதிகரிப்பு செய்ய முடியாது என திறைசேரி தெரிவித்தபோது, உதய செனவிரத்ன குழு திறைசேரியுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்தது.

அதாவது அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை இரண்டு கட்டங்களில் அதிகரிக்க திறைசேரி இணக்கம் தெரிவித்திருந்தது. அதன் பிரகாரம் முதற் கட்டமாக 10 ஆயிரம் ரூபா அதிகரிப்பதற்கும் அடுத்த கட்டமாக 2025ஆம் ஆண்டு அதிகரிக்கவுமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நடைமுறை பிரதமருக்கு தெரியாது. அது தெரியாமல் 40 வருட அரசியல் அனுபவமுள்ள ரணில் விக்ரமசிங்கவுடன் முரண்பட்டுக்கொண்டிருக்கிறார். அரசியல் அனுபவம் இல்லாமையே இதற்கு காரணமாகும்.

அத்துடன் தேசிய மக்கள் சக்தி இன்னும் ஆள ஆரம்பிக்கவில்லை. அவர்கள் தற்போது எதிர்க்கட்சி அரசியலே செய்து வருகிறது. ஜனாதிபதி அநுரகுமாத திஸாநாயக்க தேர்தல் பரப்புரைகளில், முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் வரப்பிரசாரதங்களை குறைப்பது தொடர்பாகவும் ஜனாதிபதி மாளிகைக்கு மரக்கறி வந்ததையுமே தெரிவித்து வருகிறார்.

இதனைத் தடுப்பதன் மூலம் நாட்டின் வருமானம் அதிகரிக்கப்படுவதுமில்லை. பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதும் இல்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிற்கு மக்கள் பெரும்எதிர்பார்ப்புகளுடனே வாக்களித்தார்கள். மக்கள் எதிர்பார்த்த எந்த மாற்றமும் இதுவரை இடம்பெறவில்லை.

அதேபோன்று மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை ஆளும்தரப்பு வழங்கி இருந்தது. குறிப்பாக எரிபொருள் விலை சூத்திரத்தை இல்லாதொழித்து, எரிபொருள் லீட்டர் ஒன்றின் 160 ரூபா கொமிஸன் பணத்தை நிறுத்தி எரிபொருள் விலையை குறைப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் அவர்கள் தெரிவித்த பிரகாரம் எரிபொருள் விலை குறையவில்லை. அப்படியானால் அந்த 160 ரூபா தற்போது யாருக்கு செல்கிறது என கேட்கிறோம் என்றார்.

# இலத்திரனியல் அ.அட்டைகள் டிசெம்பர் முதல் விநியோகம்

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் வாரங்களில் ஆரம்பிக்கப்படும் என ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இலத்திரனியல் அடையாள அட்டைக்கு பயன்படுத்தப்படும் சுமார் 2.3 மில்லியன் புதிய அட்டைகள் ஏற்கனவே கிடைத்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய இரத்திரனியல் அடையாள அட்டைகளில் தனி நபர்களை அடையாளப் படுத்தும் உயிரியல் பண்புகள் (கைவிரல் அடையாளம், விழித்திரை, குருதி மாதிரிகள்) உள்ளடக்கப்படுமென்று ஆட்பதிவு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கில்

# ஹேமசிறி, பூஜிதவின் விடுதலையை ரத்துச் செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை விடுவித்து கொழும்பு விசேட மூவரடங்கிய மேல்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை உயர் நீதிமன்றம் நேற்று வலுவற்றதாக்கியுள்ளது.

புலனாய்வுத்தகவல்கள்கிடைத்தும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமையின் ஊடாக குற்றவியல் குற்றச்சாட்டுகளின் கீழான குற்றங்களை இழைத்துள்ளதாக குற்றஞ்சுமத்தி சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த வழக்கில் கொழும்பு விசேட மூவரடங்கிய மேல்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவே இவ்வாறு வலுவற்றதாக்கப்பட்டுள்ளது.

சட்டமாஅதிபரால் பிரதிவாதிகளுக்கு எதிராக தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டிருந்த 2 வழக்குகளை விசாரித்த ஆதித்ய பட்டபெந்திகே, நாமல் பண்டார பலல்லே, மொஹொமட் இசர்டீன் ஆகிய மேல்நீதிமன்ற விசேட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம், 2022 பெப்ரவரி 18ஆம் திகதி பிரதிவாதிகளை விடுவித்து வழங்கிய தீர்ப்பை சவாலுக்குட்படுத்தி சட்ட மாஅதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான இறுதி தீர்ப்பை வழங்கி உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையை மீள ஆரம்பித்து பிரதிவாதிகள் தரப்பு விளக்கத்தை கோருமாறும் நீதியரசர்கள் குழாம் மேல்நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டுள்ளது. வழக்கு விசாரணைகளின்போது மேல்நீதிமன்றம் பிரதிவாதிகள் தரப்பிடம் விளக்கம் கோரியிருக்க வேண்டும் என தீர்ப்பை அறிவித்த நீதியரசர்கள் குழாம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு செய்யாமல் பிரதிவாதிகளை விடுவிப்பது சட்டத்திற்கு முரணான உத்தரவு என தீர்மானித்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

## ஆசனம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை என்றுதான் கட்சியை விட்டுச் சென்றிருந்தார்கள். அப்போது நான் பிரிப்பதற்கும் அங்கு இருக்கவில்லை. சேர்ப்பதற்காகவும் அங்கு இருந்திருக்கவில்லை.

அதற்குப் பின் தமிழ் அரசுக் கட்சியை விட்டு வெளியே சென்ற ஒவ்வொருவரும் தங்களுக்கு ஆசனம் கிடைக்கவில்லை என்றுதான் வெளியே சென்றார்கள். 2011ஆம் ஆண்டு கூட்டமைப்பிற்குள் வருகை தந்திருந்த ஆனந்தசங்கரி 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தோல்வி அடைந்ததன் பின்னர் போனஸ் ஆசனத்தை வழங்குமாறு கோரினார். அது மறுக்கப்பட்டவுடன் வெளியேறினார்.

2015இல் சுரேஷ் பிரேமச்சந்திரன் தோல்வி கண்டார். தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கோரினார்கள். வழங்கப்படவில்லை. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எப். வெளியேறியது. இப்படியாக ஆசனங்களுக்காக வெளியேறியவர்கள்தான் கூட்டமைப்பை உடைத்தவர்களே தவிர, வேறு எவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கவில்லை.

தற்போதும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் அவர்களுக்கு ஆசனங்கள் வழங்கப்படவில்லை என்ற காரணத்தினால்தான் வெளியேறினார்கள். அவர்கள் தான் தமிழ் அரசுக் கட்சிக்குள் பல்வேறு விதமான நிலைமைகள் உள்ளதாகப் பரப்புரை செய்கின்றார்கள். தமிழ் அரசுக் கட்சிக்கு 41 பேர் கொண்ட மத்திய செயற்குழு உள்ளது. அதில் 38 பேர் உயிருடன் உள்ளார்கள். அவ்வளவு பெரிய எண்ணிக்கை காணப்படுகின்ற நிலையில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஒருவரே பொறுப்பு என்றால் அதில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் யார்? அவர்கள் ஏன் எதிர்க்கவில்லை. இந்தக் கேள்விகளுக்கு அவர்களிடத்தில் பதில் இல்லை.

ஆகவே தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக நடைபெறுகின்ற சூழ்ச்சிகளை புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## யாழ்ப்பாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியில் போட்டியிடும் அற்புதலிங்கம் விஸ்கரன் மற்றும் செல்வநாயம் ரசிகரன் ஆகியோரை ஆதரித்து காரைதீவு கிராமிய குழு மற்றும் கிராம பொது அமைப்புகளால் ஒழுங்கு செய்யப்பட்ட பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் எமது தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியானது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலும் போட்டியிடுகிறது. அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவம் பறிபோய்விடக்கூடாது என்பதனால் கடந்த காலங்களில் இங்கு போட்டியிடுவதிலிருந்து நாம் விலகியிருந்தோம்.

கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத் தலைமைகள் இங்கே நிராகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை மாற்றுத் தலைமையின் அவசியத்தை எம்மக்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். அதன் காரணமாகவே அம்பாறை மக்களுக்குரிய தலைமைத்துவத்தை வழங்க தமிழ் மக்கள் விடுதலை புலிகளாகிய நாம் முன்வந்துள்ளோம்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் நாம் ஆழ வேரூன்றி அகலக்கால் பதித்துள்ளோம். அங்கே நடந்துள்ள அபிவிருத்திப் பணிகளைப் போன்று அம்பாறை மக்களுக்காகவும் எதிர்காலத்தில் எம்மால் செய்ய முடியும். கடந்த தேர்தலில் தோல்வி கண்ட அந்த போலித் தமிழ் தேசியவாதிகள் அம்பாறை மக்களின் ஆணைக்கு மதிப்பளிப்பவர்களாக இருந்திருந்தால் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்திருக்கவேண்டும். ஆனால் ஒன்றுக்கு இரண்டாக வந்து இங்கே வீடென்றும் சங்கென்றும் பிரித்து நின்று அம்பாறை மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கத் துணிந்துள்ளனர். நிச்சயம் அவர்கள் வெல்லப்போவதில்லை.

கடந்த தேர்தல்ளில் ஒன்றாக நின்றபோதே அவர்கள் தோல்வி அடைந்தார்கள். எப்படியாவது ஆயிரம் இரண்டாயிரம் என்று வாக்குளைச் சேகரித்து தங்களுக்கு ஒரு தேசிய பட்டியலை பெற்றுக்கொள்வதே அவர்களது தந்திரமான நோக்கமாகும். யாழ்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சுமந்திரன் உண்மைக்கு புறம்பான அவதூறு பரப்பினார் சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் பொலிஸில் முறைப்பாடு!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உண்மைக்கு புறம்பாக தனக்கு எதிராக அவதூறு பரப்பும் வகையில் கருத்துக்களை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் வெளியிட்டார் என்று தான் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

மன்னார் தமிழ் அரசு கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே சாள்ஸ் நிர்மலநாதன் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் மதுபானசாலைக்கு சிபாரிசு கடிதம் வழங்கியதாகவும் அதை நான் வெளிப்படையாக ஒப்புக்கொண்டதாகவும் உண்மைக்கு புறம்பான கருத்தை எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சுமந்திரன் கூறியிருந்தார்.

இந்த கருத்தை அவர் கூறியபோது, நான் இந்தியாவில் இருந்தமையால் மன்னார் வந்தவுடன் உண்மைக்கு புறம்பான கருத்து வெளியிட்டமை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராகமுறைப்பாடுசெய்துள்ளேன்.

புலம்பெயர் தமிழர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை மேற்கொள்வதற்கான உதவிகளை கோரியபோது அவர்களின் தேவைகள் நிமித்தம் நான் அந்த சந்திப்புக்களை மேற்கொள்வதற்கானஉதவிகளை செய்து கொடுத்தேன். அவ்வாறு சந்தித்தவர்களில் தனிப்பட்ட பழக்கத்தின் காரணமாக யாரும் அந்த வாய்ப்பை பயன்படுத்தி மதுபானசாலைகள் அமைப்பதற்கான அனுமதியை பெற்றிருந்தால் நான் அதற்கு பொறுப்பாக முடியாது.

நான் அண்மையில் ஓர் ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலாக வழங்கியிருந்தேன். ஆனால் சுமந்திரன் உண்மைக்கு புறம்பாகநான்எழுத்துமூலசிபாரிசுவழங்கியதாகவும் அதை ஒத்துக்கொண்டதாகவும் சொன்ன கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பொலிஸார் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

அதனால்தான் தனக்கு இம்முறை ஆசனம் வழங்கவில்லை என சுமந்திரன் குறிப்பிடுவதாகும். அது முற்றிலும் பொய் என்றும் 2020ஆம் ஆண்டில் இருந்தே கட்சியின் செயற்பாடுகளில் இருந்த அதிருப்தி காரணமாக உளவியல் ரீதியாக கட்சியோடு பயணிப்பதா, இல்லையா? என்ற மனநிலை இருந்து வந்ததாகவும், அதேவேளை எனது சுயவிருப்பத்தாலும் உடல் நல பிரச்சினைகளாலும் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதாலும் நானாக மேற்கொண்ட முடிவே அது என அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக சுமந்திரன், 2020ஆம் ஆண்டுக்கு பிறகுவிடுதலைப்புலிகளுக்குஎதிரானகருத்துக்களை தொடர்ந்து தெரிவித்து வந்த நிலையில், அவருக்கு எதிராக தான் சம்பந்தன் அவர்களுக்கு கடிதம் எழுதியனார் எனவும் சுமந்திரன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு இவ்வாறான கருத்துக்களைதெரிவிப்பதைஏற்றுக்கொள்ளமுடியாது எனவும்அவருக்குஎக்காரணம்கொண்டும்கட்சியின் பதவி நிலைகள் வழங்கக்கூடாது எனவும் எழுத்து மூலமாக சம்பந்தன் ஐயாவுக்கு எழுதியிருந்தேன்.

அத்துடன் கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலின் போது வன்னியில் சுமந்திரன் ஏறும் எந்த அரசியல் மேடையிலும் நான் ஏற மாட்டேன் எனத் தெரிவித்திருந்தேன். அதே போன்று எந்த அரசியல் மேடையிலும் நான் ஏறவில்லை. அதன் காரணம் என்னவென்றால், சுமந்திரன் பிரசாரம் செய்து அதில் ஒரு வாக்கு விழுந்து நான் வெற்றி பெறக்கூடாது என்பதற்காகவே.

அவ்வாறான நிலையில், அவர் எனக்கு எதிராக பல வேலைகள் செய்திருந்தார். இருந்தாலும், வன்னி தேர்தல் தொகுதியில் தமிழரசு கட்சி சார்பாக அதிக வாக்குகளை பெற்று நான் வெற்றி பெற்றேன்.

அதேவேளை அண்மையில் கட்சியின் தலைமைத்துவம்சம்பந்தப்பட்டவிடயத்தில்சுமந்திரன் தலைவராக வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் நேரடியாகவே சிறிதரனுக்கு ஆதரவாக செயற்பட்டதுடன் சுமந்திரன் தலைவராக வர முடியாமைக்கு நான் பெரும் பங்காற்றியிருந்தேன். அதுவும் அவருக்கு நன்றாக தெரியும்.

இப்படியாக கட்சியில் இருந்த அதிருப்தியான நிலைமை காரணமாக இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க தேர்தலில் போட்டியிட வேண்டாம் என தீர்மானித்திருந்தேன்.

சுமந்திரனுடன் 2020ஆம் ஆண்டில் இருந்தே முரண்பாடுகளோடுதான் பயணித்தேன். இவ்வாறிருக்க, இந்த தேர்தலில் சுமந்திரனுக்கு அடிமையாக வாக்கு கேட்க முடியாது.

என்னைப்பொறுத்தவரையில், வன்னிமாவட்டம், திருகோணமலைமாவட்டம், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். ஏனென்றால், இந்த பகுதிகளில் சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. ஆனால், சுமந்திரனின் இவ்வாறான தொடர்ச்சியான செயற்பாடுகளால் கட்சி அங்கத்தவர்களும் மக்களும் புலம்பெயர் அமைப்புகளும் மன விரக்தியில் இருக்கிறார்கள் என்பதை பதிவு செய்கின்றேன்.

அதேவேளை சுமந்திரனுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் ஒன்றை தெரிவித்துக்கொள்கிறேன். நான் எந்த ஒரு மதுபானசாலைக்கும் அனுமதி பெறவும் இல்லை. யாருக்கும் சிபாரிசு செய்யவுமில்லை. எனக்கு அறிமுகமானவர்கள் அதை பெற்றிருந்தால், அது அவர்களின் தனிப்பட்ட விடயம். அதற்கு நான் எந்த சிபாரிசு கடிதமும் கொடுக்கவில்லை.

சுமந்திரனின் கருத்து தொடர்பில் நான் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

தேர்தல் நியமனத்துக்காக நான் வாக்கு கேட்பதாக விண்ணப்பிக்கவில்லை. அதேநேரம் தற்போது இருக்கும் தமிழரசு கட்சி நிர்வாகத்தோடு பயணிக்க முடியாது என்பதுடன் சுமந்திரன் சொல்லும் எல்லாவற்றுக்கும் தலையாட்டிக்கொண்டு இருக்க முடியாது என்பதால் தேர்தலில் இருந்து நானாகத்தான் விலகினேன்.

சுமந்திரன் தலைவராவதில் ஏற்பட்ட பிரச்சினை மற்றும் பல்வேறு வன்மத்தை மனதில் வைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அவர் சார்ந்தவர்களும் தொடர்ந்து சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

அதே நேரம் சுமந்திரனுக்கு நான் பகிரங்க சவால் விடுக்கின்றேன். நான் வழங்கிய சிபாரிசு கடிதத்தை அவர் கொண்டுவந்தால் நான் அவர் சொல்வதை செய்கிறேன். - என்றார். (05)

# போரில் உயிர் நீத்த மக்களுக்குத் தனது சொந்த செலவில் நினைவுத் தூபி அமைக்கத் தயாராம்

## அங்கஜன் இராமநாதன் தேர்தல்கால உறுதிமொழி



உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு எனது சொந்த செலவில் நினைவுத்தூபி அமைக்கத் தயார் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தால் நாட்டு மக்கள் பலரை இழந்துவிட்டோம்.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வு இன்மை மற்றும் சம உரிமை கிடைக்காமை முதலான காரணங்களால் உள்நாட்டு யுத்தம் உருவாகி அது பலரையும் காவு கொண்டுவிட்டது.

இந்த யுத்தத்தால் தமிழ் மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் மௌனித்து 15 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் தமிழ் மக்கள் யுத்த வடுவில் இருந்து மீள முடியாமல் உள்ளனர்.

அத்தோடு, தமிழ் மக்களுக்கு உறவுகளை நினைவுகூருவது கூட சவால் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

இந்நிலையில், பொதுவான நினைவுத்தூபி ஒன்றை அமைத்து யுத்தத்தில் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் எனது சொந்த செலவில் பொதுவான நினைவுத் தூபியை நிறுவி, நாட்டில் நல்லிணக்கத்தை மலரச் செய்வதன் ஊடாக சிறந்த ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும். - என்றார். (05)

# காணி உறுதி மோசடி தொடர்பில் சட்டத்தரணி உட்பட இருவர் கைது

## சரீரப் பிணையில் விடுவிப்பு

அக்கரைப்பற்றில் சீவிய நல உரித்து ஒன்றை கிரயமாக மாற்றி விற்பதற்கு உறுதி எழுதிய சந்தேகத்தின் பேரில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண் சட்டத்தரணி ஒருவர் உட்பட இருவரை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் திங்கட்கிழமை சரீரப் பிணையில் விடுவித்தார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் சம்மதத்துடன் சீவிய நல உரித்தின் ஆதனம் ஒன்றை கிரயமாக எழுதி விற்க சட்டத்தரணி ஒருவர் உறுதி எழுதி வழங்கியுள்ளார். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாட்டையடுத்து ஒருவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டார்

இந்தநிலையில் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவந்த மாவட்ட குற்ற விசாரணைப் பொலிசார் இந்த உறுதியை எழுதிய பெண் சட்டத்தரணி ஒருவரையும் இதற்கு சாட்சி கையெழுத்திட்ட ஆண் ஒருவர் உட்பட இருவரை சந்தேகத்தின் அடிப்படையில் திங்கட்கிழமை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை திங்கட்கிழமை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவர்களை பிணையில் விடுவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரிசி அரசியல்

2024 ஆம் ஆண்டு பெரும் போக மற்றும் சிறுபோக பருவங்களில்நெல் உற்பத்தி உபரியாக காணப்பட்டதனால் இலங்கையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கோ அரிசியின் விலை அதிகரிப்பதற்கோ வாய்ப்பு இல்லை என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.எல்.ரந்திக நேற்று இந்தத் தகவலை வெளியிட்டார். ஆனால் அவர் சொல்வதற்கு மாறாக அரசியின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகின்றது. மக்களின் முதன்மையான உணவான அரிசியின் இந்த விலை உயர்வு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்களுக்குப் பெரும் பிரச்சினையாக மாறி வருகின்றது. ஆளும் தரப்பு அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை அறிவித்தாலும் சந்தைகளில் அந்த விலையிலும் அதிகமாகவே அரிசி விற்பனையாகின்றது. நெல் உற்பத்தி உபரியாக இருக்கும்போது அரிசியின் விலையேற்றம் திட்டமிடப்பட்டதாகவே தோன்றுகின்றது.

நெல் கொள்வனவு விடயத்தில் கடந்த காலத்தில் காணப்பட்ட ஆளும்தரப்பின் குறைந்தபட்சத் தலையீடுகளே அரிசியின் தற்போதைய விலை உயர்வுக்கு வழிவகுத்துள்ளதாக ரந்திக குறிப்பிடுகிறார்.

இதற்கிடையே, அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் முக்கிய அரிசி ஆலைகளின் நெல் கையிருப்பு மற்றும் அரிசி கையிருப்பு தொடர்பில் ஆளும்தரப்பு விவரங்களைச் சேகரித்து வருகின்றது. அப்படித் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது.

4 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகள் தொடர்பான தகவல்கள் வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஏனைய 10 மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்களிடம் காணப்படும் நெல் கையிருப்புமற்றும்அரிசிகையிருப்புதொடர்பானஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டார். இந்த அறிக்கையினாலும் இருப்புக் கணக்கெடுப்பினாலும் அரிசியின் விலையை உடனடியாகக் கீழிறக்க முடியும் என்று நம்புவது கடினம்.

அரிசி ஆலைகள் பதுக்கி வைத்துள்ள நெல்லைக் கண்டுபிடிப்பதும் அதைச் சந்தைக்குக் கொண்டுவருதும் இலகுவில் ஆற்றக்கூடிய பணிகள் அல்ல. இதுபோன்ற தருணங்களில் அரசின் கைகளில் நெல் இருப்பு அதிகம் இருந்திருந்தால் நிலமையை ஓரளவுக்காகவது சமாளிக்க முடியும். ஆனால், ரணிலின் ஆட்சியில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் உடனடியாகவே மக்களுக்குஅரிசியாகஇலவசவிநியோகம்செய்யப்பட்டது. பெரும் போகத்திலும் பின்னர் சிறுபோகத்திலும் அரசு போதியளவு நெல் கொள்வனவிலும் ஈடுபடவில்லை. இதுவே தற்போதைய நெருக்கடிக்குப் பிரதான காரணம் என்பதே வல்லுநர்களின் கருத்தாக இருக்கின்றது.

இதற்குத் தீர்வாக நெல் கொள்முதல் அளவை அதிகரிப்பதற்கும் அதற்கான களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. வெறும் அறிவிப்போடு மட்டும் நின்றுவிடாமல் அதனைச் செயல்படுத்துவதற்கும், இந்தப் பெரும்போகத்திலேயே அதனைச்செயற்படுத்துவதற்கும்ஆளும்தரப்புவேண்டிய நடவடிக்கையை எடுத்து இந்த அரிசி அரசியலை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

# பலமான ஆளும் தரப்புக்கு மத்தியிலும் பலம் குன்றாத ஐக்கிய மக்கள் சக்தி

**உபுல் யோசப் பெர்னான்டோ**

இலங்கையின் தேர்தல் வரலாற்றில், ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தல் போன்றவற்றின் பின்னர் ஒரு மாதத்திற்குள் மாகாண சபை அல்லது உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்கள் மட்டுமே உள்ளன. 2004இல், ஒரு பொதுத் தேர்தலுக்குப் பிறகு மாகாண சபைத் தேர்தல் நடந்தது. அந்த ஆண்டு ஏப்ரல் 2 பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஏப்ரல் 24 வடமேல் மாகாண சபைத் தேர்தல். அதற்குப் பின்னர் இந்த ஆண்டு (2024) செப்டம்பர் 21



ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு, ஒக்டோபர் 26 எல்பிட்டியில் இடைத்தேர்தல் நடைபெற்றது.

2004 ஏப்ரல் 2 பொதுத் தேர்தல் நடந்தபோது ரணில் விக்கிரமசிங்கவின் ஆளும் தரப்பே அதிகாரத்தில் இருந்தது. அந்தத் தேர்தலுக்கும் 2024 நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கும் இடையில் ஒரு சமாந்திரத்தைக் காணமுடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஜனதா விமுக்தி பெரமுனா (JVP) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு (UPFA) ஆகியன இணைந்து 2004 பொதுத் தேர்தலில் ரணிலின் ஆளும்தரப்பை வெற்றிகரமாக வீழ்த்தின. அதேபோன்று 2024 செப்டெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது மீண்டும் ரணில் ஜனாதிபதியாக அதிகாரத்தில் இருந்தார். இந்தத் தடவை அவரை ஜேவிபி தோற்கடித்தது.

2004 பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி ஜேவிபி கூட்டணி 45.60% வாக்குகளுடன் வெற்றி பெற்றது, ரணிலின் ஐதேக 37.83% வாக்குகளுடன் தோற்கடிக்கப்பட்டது. குருநாகல் மாவட்டத்தில் சுதந்திரக் கட்சி ஜேவிபி கூட்டணி 51.9% வாக்குகளைப் பெற்றது. ஐதேக 42.6% வாக்குகளைப் பெற்றது. புத்தளம் மாவட்டத்தில் சுதந்திரக் கட்சி -ஜேவிபி கூட்டணி 49.3% வாக்குகளைப் பெற்றது, ஐக்கிய தேசியக் கட்சி 46.6% வாக்குகளைப் பெற்று



தோல்வியடைந்தது.

அதன் பின்னர் ஏப்ரல் 24, 2004 நடைபெற்ற வடமேல் மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி-ஜேவிபிகூட்டணிகுருநாகலில்59.85%வாக்குகளைப் பெற்றது, ஐதேக 35.69% வாக்குகளைப் பெற்றது. புத்தளத்தில் சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி கூட்டணி 57.10% வாக்குகளைப் பெற்றது, ஐக்கிய தேசியக் கட்சி 42.46% வாக்குகளைப் பெற்றது.

பொதுத் தேர்தலில் குருநாகலில் சுதந்திரக் கட்சி - ஜேவிபி கூட்டணிக்கு 51.09% ஆக இருந்த வாக்கு எண்ணிக்கை ஒரு மாதத்திற்குப் பின்னர் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் 59.85% ஆக உயர்ந்தது. புத்தளத்தில் பொதுத் தேர்தலில் 49.3% ஆக இருந்த வாக்கு வீதம் அதன் பின்னர் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் 57.10% ஆக அதிகரித்தது. இது வழக்கத்துக்கு மாறானது அல்ல, உலகெங்கிலும் உள்ள அரசியல் போக்குகளில், ஒரு தேசியத் தேர்தலில் வெற்றிபெறும் கட்சி, குறுகிய காலத்திற்குள் நடைபெறும் அடுத்தடுத்த தேர்தல்களில் அதிக வாக்குளையே பெறுவது வழமை.

இருப்பினும், சமீபத்திய 2024 எல்பிட்டிய இடைத்தேர்தலில், 'அந்த அலை எங்கே சென்றது?' என்ற கேள்வி எழுகிறது. 2024 ஜனாதிபதித் தேர்தலில் ஜேவிபி எல்பிட்டியவில் 49.37% வாக்குகளைப் பெற்றது, ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு நடைபெற்ற இடைத்தேர்தலில் அவர்களின் சதவீதம் 47.64% ஆகக் குறைந்தது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமேல் மாகாண சபைத் தேர்தல் போன்று அல்லாமல் எல்பிட்டிய தேர்தலில் ஆளும் தரப்புப் பலம் பெற்ற நிலையிலும் எதிர்க்கட்சிகள் பலவீனமடையவில்லை என்பது கண்கூடு.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், அனுரவின் ஆதிக்கம் மிகவும் வலுவாகத் தோன்றியதால், அவரது செல்வாக்கு அலைக்கு அஞ்சிய அரசியல் பிரமுகர்கள் பலர் பொதுத் தேர்தலில் இருந்து விலகினர். விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றவர்களுடன் ரணில், மகிந்த போன்ற பிரமுகர்களும் பொதுத் தேர்தலில் இருந்து ஒதுங்கினர். இந்தச் சூழலைப் பார்க்கும்போது, எல்பிட்டியவில் ஜேவிபி சுமார் 70% வாக்குகளைப் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. தேசியத் தேர்தல் ஒன்றில் வெற்றிபெறும் கட்சி, அதைத் தொடர்ந்து உடன் நடக்கும் உள்ளாட்சித்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பலமான ஆளும் தரப்புக்கு...

4ம் பக்க தொடர்ச்சி...........

தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும் வழக்கமான கொள்கை இங்கு தோற்றுப்போனது. மாறாக, ஜே.வி.பி. தனது வாக்குச் சதவீதத்தில் சரிவைக் கண்டது.

ஒரு தேசியத் தேர்தலில் தோல்வியடையும் எதிர்க்கட்சியானது, உடன் அடுத்து நடக்கும் உள்ளூராட்சி அல்லது மாகாணத் சபைத் தேர்தலில் மிகவும் குறிப்பிடத்தக்க தோல்வியைச் சந்திப்பது வழக்கமாக இருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி எல்பிட்டியவில் அத்தகைய சரிவைச் சந்திக்கவில்லை.

2019ஆம் ஆண்டு, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நடைபெற்ற எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது, ஐக்கிய தேசியக் கட்சியால் அங்கு ஒரு தொகுதியைக்கூடக் கைப்பற்ற முடியவில்லை. அந்த நேரத்திலும் ரணில் பிரதமராக இருந்தார், ஐக்கிய மக்கள் சக்தி அப்போது இல்லை. ரணிலும் சஜித்தும் ஒன்றாக இருந்தனர். அப்படியிருந்தும்கூட எல்பிட்டிய பிரதேசத்தில் ஐதேகவால் ஒரு தொகுதியில்கூட வெல்ல முடியவில்லை. இது 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு முன்னோட்டமாக அமைந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி வாய்ப்புக் குறித்து சந்தேகத்தை எழுப்பியது.

ஆனால், அதே எல்பிட்டியவில் 2024 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னரும்கூட ஐக்கிய மக்கள் சக்தியால் இரண்டு தொ-குதிகளில் வெற்றிபெற்றதுடன் 6 உறுப்பினர்களையும் பெற முடிந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தோல்வி, வேட்புமனுக்கள் தொடர்பான உட்கட்சி கருத்து வேறுபாடுகள் மற்றும் ஐதேகவில் இருந்து விலகியவர்கள் முன்வைத்த சவால்கள் இருந்தபோதிலும் ஐக்கிய மக்கள் சக்தியால் இதைச் சாதிக்க முடிந்துள்ளது.

ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி (NPP) தற்போதைக்கு ஏனைய கட்சிகளைவிடப் பலமானவையாகக் காணப்படுகின்ற அதேவேளையில், இன்று இலங்கையின் மிகவும் வலிமையான கட்சிகளில் ஒன்றாக ஐக்கிய மக்கள் சக்தியின் பலத்தை இந்த முடிவு எடுத்துக்காட்டுகிறது. 2024 ஜனாதிபதித் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு பெரும்பாலும் முன்னாள் பொது ஜன பெரமுன (SLPP) ஆதரவாளர்களிடம் இருந்து வந்தது. மாறாக, ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரிய அடித்தளத்தில் அதிகம் வேரூன்றியவர்கள், அவர்களின் முன்னாள் தலைவர் ரணில் ஜனாதிபதியாகப் பதவியில் இருந்தபோதும்கூட அவர் பக்கம் சாய விரும்பவில்லை.

இந்தப் பின்னணியில் அடுத்த பொதுத் தேர்தலிலு-ம் ஐக்கிய மக்கள் சக்தி முக்கிய எதிர்த் தரப்பாக எழுச்சியடையும் என்று கணிக்கலாம்.

# காட்டு யானை தாக்கி மூதாட்டி பொலன்னறுவையில் இறப்பு

பொலன்னறுவை,செவனபிட்டிய பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மனம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்பொலன்னறுவை, செவனபிட்டியபிரதேசத்தைச்சேர்ந்த 71 வயதுடைய மூதாட்டி ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

உயிரிழந்த மூதாட்டி தனது வீட்டிற்கு அருகில் சிறிய கடை ஒன்றை நடத்தி வந்துள்ள நிலையில் சம்பவத்தன்று தனது கடையில் உறங்கிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது கடையை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த காட்டு யானை ஒன்று இந்த மூதாட்டியை பலமாக தாக்கியுள்ளது.

காயமடைந்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஹெரோயினுடன் ஞாயிறன்று ஜா – எலவில் ஒருவர் கைது

ஜா-எல பொலிஸ்பிரிவுக்குஉட்பட்ட தடுகம பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என ஜா - எல பொலிஸார் தெரிவித்தனர்.

ஜா- எல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஜா- எல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார் .

சந்தேக நபரிடம் இருந்து 05 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜா- எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தமிழ் மக்கள் பலமான கூட்டணியொன்றை நாடாளுமன்றத்துக்கு அனுப்புதல்வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

தமிழ் மக்கள் பலமான கூட்டணியொன்றை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக தமிழ் கூட்டணியின் வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர் சுரேஷ் பிரேமசந்திரன் திங்கட்கிழமை கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள கட்சியின் தேர்தல் அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் -

தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி மீது இருந்த நம்பிக்கை படிப்படியாக குறைவடைந்து வருகின்றது.

நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் 113 ஆசனங்களை எடுக்காவிட்டால் இவர்கள் ஏனைய கட்சிகளிடமிருந்து ஆதரவு கோரும் நிலை ஏற்படலாம் அவ்வாறு ஆதரவு கோரும் போது ஊழல்வாதிகள் உள்வாங்கப்படலாம் என்று குறிப்பிட்டவர்

தற்போதைய அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைகிடைக்கக்கூடாது. தமிழ்மக்கள் ஒருபலம் மிக்க அமைப்பாக தமிழ் மக்கள் நாடாளுமன்றத்துக்கு பிரதிநிகளை அனுப்ப வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# ஆனைக்கோட்டை பகுதிகளில் வன்முறை கும்பல் அட்டகாசம்

## பொலிஸார் விசாரணை





யாழ்ப்பாணம்ஆனைக்கோட்டை பகுதியில் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் வீட்டில் இருந்த சொத்துக்களுக்குசேதம்விளைவித்து விட்டு தப்பி சென்றுள்ளது.

இந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தசம்பவம்தொடர்பில்மேலும் தெரியவருவதாவது -

இரண்டு மோட்டார் சைக்கிள் களில் ஐந்திற்கும் அதிகமான வன்முறை கும்பல் இந்த வீட்டிற்கு நுழைந்துள்ளனர்.

பின்னர், வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், சைக்கிள்,ஜன்னல் கண்ணாடிகள் , மீன் தொட்டி , தையல் இயந்திரம் என்பவற்றையும் அடித்து உடைத்து சேதமாக்கிவிட்டுதப்பிசென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# நாடாளுமன்றத்துக்குள் குண்டு வீசியவர்கள் அதை விமர்சிப்பதற்கு எந்த தகுதியுமற்றவர்

## நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் இரத்தக்களறியை ஏற்படுத்திய வரலாற்றைக்கொண்டவர்கள் நாடாளுமன்றத்தை விமர்சிப்பதுக்கு எந்த தகுதியும் அற்றவர்கள். ஜனாதிபதியின் நடவடிக்கை நாடாளுமன்றம் தொடர்பில் மக்கள் மத்தியில் இருந்து வரும் நம்பிக்கையை இல்லாமலாக்கச் செய்யும் என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில் -

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தை தரக்குறைவாக விமர்சித்து வருவதைக் காண்கிறோம். இதன் மூலம் நாடாளுமன்றத்துக்குபுதிதாகச்செல்லஇருப்பவர்களுக்கும் நாடாளுமன்றம் தொடர்பில் பிழையான எண்ணமே தோன்றும்.

அதேபோன்று அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த நடவடிக்கை நாடாளுமன்றம் தொடர்பில் மக்கள் மத்தியில் இருந்து வரும் நம்பிக்கையை இல்லாமல் செய்கிறது. நாட்டின் ஜனாதிபதி என்றவகையில் அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த செயலை நாங்கள் கண்டிக்கிறோம்.

நாடாளுமன்றத்தை திருடர்களின் குகை என விமர்சிக்கும் அநுரகுமாரவின் மக்கள் விடுதலை முன்னணியே 1987ஆம் ஆண்டும் நாடாளுமன்றத்துக்குள் குண்டுதாக்குதல் மேற்கொண்டு ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவை கொலை செய்ய முற்பட்டது.

இவ்வாறு இரத்தக்கறை படிந்த வரலாற்றைக் கொண்டவர்கள் தற்போது நாடாளுமன்றத்தை திருடர்களின் குகை என தெரிவிக்கின்றனர்.

மக்களின் பணத்தையும் நாட்டின் சொத்துக்களையும் கொள்ளையடித்தே அவர்களின் கட்சிக் காரியாலயத்தை கட்டியெழுப்பியுள்ளார்கள். கைகளில் கறைபடிந்தவர்கள் தற்போது சுத்தமானவர்கள் போன்று கதைத்து வருகின்றனர்.

நாட்டின் முன்னைய தலைவர்கள் எப்போதும் நாடாளுமன்றத்தின் சம்பிரதாயம் மற்றும் கௌரவத்தை பாதுகாக்கவே நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு அவர்கள் இடமளிக்கவில்லை. ஆனால் கடந்த காலத்தில் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தின் போது மக்கள் விடுதலை முன்னணியே நாடாளுமன்றத்தை தாக்குவதற்கு வந்தார்கள்.

ரணில் விக்ரமசிங்க அதற்கு இடமளிக்காமல் பாதுகாப்புதரப்பினரின் உதவியுடன் நாடாளுமன்றத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்.

திருடர்கள் மற்றும் மோசடி காரர்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்து அனுப்பாமல் நாடாளுமன்றத்தை சுத்தப்படுத்தும் பொறுப்பு மக்களிடமே இருக்கிறது.

மக்களின் பொறுப்பை அநுரகுமார திஸாநாயக்க எடுக்கக்கூடாது. அநுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டின் ஜனாதிபதி என்பதை மறந்து, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் போன்றே தேர்தல் மேடைகளில் பேசி வருகிறார்.

எனவே நாட்டின் ஜனாதிபதி என்றவகையில் நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் அநுரகுமார திஸாநாயக்க செயற்பட வேண்டும். - என்றார்.

(05)

# சட்டவிரோத மதுபானத்தை கடத்திச் சென்றவர் கைது

கம்பஹா, பெம்முல்ல பிரதேசத்தில்ஓட்டோவில்சட்டவிரோத மதுபானத்தைக் கடத்திச் சென்றதாக கூறப்படும் சந்தேகநபரொருவர் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பெம்முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

பெம்முல்ல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்தஓட்டோஒன்றில்மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்கம்பஹா, கொட்டுகொட பிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 67 லீற்றர் சட்டவிரோத மதுபானம் பொலிஸாரால்கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெம்முல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்

## அஸாத் சாலி கோரிக்கை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று வேண்டும், இல்லாவிட்டால் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்எனபுதியஜனநாயகமுன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி இருந்தார். அவரின் வாக்குறுதிகளை நம்பியே மக்கள் அவருக்கு வாக்களித்து ஜனாதிபதியாக்கி இருக்கிறார்கள்.

ஆனால்ஜனாதிபதியாகபதவிஏற்றுஒருமாத காலம் கடந்தும் அளித்த வாக்குறுதிகளல் ஒன்றையேனும் நிறைவேற்ற அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முடியாமல்போயிருக்கிறது.

தற்போது பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களுக்கு செல்லும் ஜனாதிபதி, தான் மக்களுக்குஅளித்தவாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்ற முடியாமல் போனமைக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்.

அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தேவையான கால அவகாசத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர்களின் கட்சியில்இருந்துகளமிறக்கிஇருப்பவர்கள்யார் எனமக்களுக்குஅறிமுகம்இல்லாதவர்களாகும்.

அதனால் மக்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கும்போது சிந்தித்து செயற்பட வேண்டும். அறிமுகம் இல்லாதவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதால் எவ்வாறான பாதிப்பு ஏற்படும் என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேலும் கடந்த காலங்களில் எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் அதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் அநுரகுமார திஸாநாயக்கவே அதிகம் கதைத்தார்.

எரிபொள்களை வழங்க முடியுமான விலையை கணக்கு பாடே;டு காட்டியிருந்தார். தற்போது ஜனாதிபதியான பின்னர் இரண்டு தடவை எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் அவர்கள் தெரிவித்த பிரகாரம் விலை குறைவடையவில்லை. இறுதியாக எரிபொருள் விலை குறைத்தபோதும் தனவந்தர்கள் பயன்படுத்தும் எரிபொருள் வகையில் மாத்திரமே விலை குறைப்பு இடம்பெற்றது. அதுவும் அவர்கள் தெரிவித்த அளவில் விலை குறைப்பு இடம்பெறவில்லை.

மேலும் வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள அன்று மக்கள் சரிசையில் இருந்தபோது அதுதொடர்பில் அரசாங்கத்தை பாரியளவில் விமர்சித்து வந்தது மக்கள் விடுதலை முன்னணியாகும்.

ஆனால் தற்போது அன்றைக்கும் பார்க்க கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கான வரிசை நீடித்துள்ளது. கடவுச்சீட்டு ஒரு தொகை வர இருப்பதாகவும் இந்த பிரச்சினையை ஒரு வாரத்துக்குள் தீர்ப்பதாக அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

ஆனால் அந்த கடவுச்சீட்டு தொகை முன்னாள் அமைச்சர் டிரான் அலஸ் கொண்டுவந்த தொகையாகும். அவ்வாறு கொண்டுவரப்பட்ட கடவுச்சீட்டுகளையும் இவர்களால் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முறையான வேலைத்திட்டம் இல்லை.

இந்த அரசாங்கத்தை வீழ்த்த இடமளிக்கப்போவதில்லை என அநுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கிறார். ஆனால் 69இலட்சம் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவும் இவ்வாறுதான் தெரிவித்தார்.

ஆனால் இறுதியில் நாட்டை விட்டு செல்ல வேண்டிய நிலையே அவருக்கு ஏற்பட்டது. அதனால் இவர்களுக்கு நாட்டை கொண்டு செல்ல முறையான வேலைத்திட்டம் இல்லை.

அதனால் இவர்களால் நாட்டை கொண்டு முடியாது. அதனால் மிக விரைவாக இந்த அரசாங்கம் வீழ்ச்சியடையும். – என்றார்.

(05)

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் தெமட்டகொடையில் கைதானார்

## 3 லட்சம் ரூபா பெறுமதியானவை

3 லட்சம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெமட்டகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு, மாளிகாவத்தை பிரதேசத்தில் உள்ள திரையரங்கம் ஒன்றிற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


கைது செய்யப்பட்டவர் கொஸ்கம பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதுடையவர் ஆவார். சந்தேக நபரிடமிருந்து 5 ஆயிரம் போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இந்த போதை மாத்திரைகளை மற்றுமொரு நபருக்கு விற்பனை செய்வதற்கு தயாராக இருந்துள்ளார்எனப்பொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைதெமட்டகொடைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மக்களின் வெற்றியே எங்கள் வெற்றி மக்கள் அரசியலே எங்கள் அரசியல்

## வேட்பாளர் சந்திரகுமார் தெரிவிப்பு



சொந்த நிலத்தில் ஒருவர் வாழக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக அரசியல் ரீதியாக உழைக்க வேண்டும். உண்மையில் அப்படிச் செய்வதே தேசியப் பணியாகும். அதுவே தமிழ்த்தேசியத்தின் உயிர்நாடியாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்,கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துளளார்.

கிளிநொச்சி, உதயநகரில் நடந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற் றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். யாரைத் தெரிவுசெய்வது என்று கேட்கிறார்கள். நாங்கள் சொல்கிறோம், மக்களாகிய நீங்கள் உங்களுக்கே வாக்களியுங்கள் என்று. ஆம், உங்களுக்காக என்றால், நீங்கள் வெற்றியடைவதற்காக உங்கள் வாக்குகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்றே அர்த்தமாகும்.

கடந்த காலத்தில் நீங்கள் தெளிவாகச் சிந்திக்க மறந்ததால்தான், அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் வாக்களித்தபடியால்தான் தவறானவர்கள் அரசியல்அதிகாரத்தைக்கைப்பற்றிக்கொள்ள முடிந்தது. தவறானவர்களின் கைகளில் அரசியல் அதிகாரம் சென்றால், அது தவறான விளைவுகளையே உருவாக்கும். அதுதான் இன்று நடந்திருக்கிறது.

இப்பொழுது தென்னிலங்கை மக்கள்'சிங்கள மக்கள் ' அந்தத் தவறைத் திருத்திக் கொள்வதற்குத் தயாராகி விட்டார்கள். அதனால் அங்கே புதியதொரு அரசியல் சூழல் உருவாகியிருக்கிறது. ஊழலற்ற, மக்கள் மீது அக்கறையுள்ள அரசியல்வாதிகளை மக்கள் வெற்றிபெற வைக்கும் நிலை உருவாகியுள்ளது.

அதேபோன்று வடக்கிலும் கிழக்கிலும் மாற்றம்நிகழவேண்டும்.மக்களுக்குவழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்களை மக்கள் தோற்கடிக்க வேண்டும். சமூக வளர்ச்சிக்குப் பங்களிக்காதவர்களை மக்கள் விரட்ட வேண்டும்.

மக்களுடைய போராட்டத்தையும் போராளிகளின் தியாகங்களையும் வைத்து அரசியற்பிழைப்புநடத்துவோரைக் கலைக்க வேண்டும்.மக்களுடையபிரச்சினைகளுக்குத் தீர்வைத் தர முடியாதவர்கள் எதற்காக? மக்களுடைய தேவைகள் என்ன என்று தெரியாதவர்கள் எதற்காக?

நாம் கடந்த காலத்தில் போரினால் அழிந்து போயிருந்த கிளிநொச்சியைக் கட்டியெழுப்பியிருக்கிறோம். மக்களின் மனதிலே நிலைத்திருக்கக் கூடிய பல பணிகளை ஆற்றியிருக்கிறோம். இன்று வடக்கிலே – வவுனியாவுக்கு அப்பால் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் அதிகூடியோர் வேலை செய்யும் ஒரு தொழிற்சாலை கிளிநொச்சியில் மட்டும்தான் உள்ளது. அந்தத் தொழிற்சாலையிலே 6000 பேர்வேலை செய்கிறார்கள்.

ஆம், 6000 பேர் வேலை செய்யக்கூடிய வேறு ஒரு தொழிற்சாலையை வேறு எங்காவது யாராவது காட்ட முடியுமா? இப்ப ஆண்டுக்கொரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு முயற்சித்திருந்தால், தமிழ் மக்களின் பொருளதாரம் முன்னேற்றம் கண்டிருக்கும். எங்கள் நிலத்தை விட்டு மக்கள் வெளியேறிச் செல்லும் நிலை வந்திருக்காது. மக்கள் தொகை குறைந்தால் எங்களுடைய பிரதிநித்துவம் குறைந்து விடும்.

அதுதான் நடக்கிறது. அதை மாற்றிய மைக்கக் கூடியவர்கள் இங்கில்லை. நாங்கள் மக்களை முன்னேற்ற முயற்சிக்கிறோம். எங்கள் மண்ணை வளப்படுத்துவதற்குப் பாடுபடுகிறோம். சொந்தநிலத்தில்ஒருவர்வாழக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும். உண்மையில் அப்படிச் செய்வதே தேசியப் பணியாகும். அதுவே தமிழ்த்தேசியத்தின் உயிர்நாடியைப் பாதுகாப்பதாக அமையும்.

எமது மண்ணில் போருக்குப் பிந்திய அரசியலையாரும்செய்யவில்லை.அதைநாம் மட்டுமே செய்து வருகிறோம். ஆகவேதான் சொல்கிறோம், எமது வழி தனியான வழி. அது ஒரு புதிய வழி. மக்களுக்கான வழி. அதுவே சர்வதேச சமூகம் அங்கீகரிக்கின்ற வழி என. அந்த வழியைத் தெரிவு செய்வதும் அதற்கு ஆதரவளிப்பதுமே மக்களுடைய வெற்றிக்கு உதவும். அதுவே மக்களுக்கான வெற்றியாகும்.

ஆகவேதான் மக்கள் வெற்றியடைய வேண்டும் என்றால், மக்களுடைய தேவைகளைஉணர்ந்தவர்கள்வெற்றியடைய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இந்தத் தேர்தலில் புதிய மாற்றங்களைத் தமிழ் மக்களும் செய்து காட்ட வேண்டும்.

நாம்ஐக்கியமக்கள்சக்தியுடன்இணைந்து ஏன் போட்டியிடுகிறோம் என்றால், தமிழ் மக்களுடையபிரச்சினையைஏற்றுள்ள,தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற ஒரே தரப்பாக ஐக்கிய மக்கள் சக்தியே உள்ளது. ஆகவேதான் நாமும் மலையக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளுமாக இணைந்து தமிழ்பேசும் சமூகங்களாக எமது உரிமைகளைக் கேட்கிறோம்.

இப்படி ஒன்றிணைந்து நின்று குரல் கொடுப்பதும் போராடுவதுமே இன்றைய சூழலில் வெற்றியைத் தரும். ஆகவேதான் நாம் யதார்த்தமான, அறிவுபூர்வமான அரசியலை முன்னெடுக்கிறோம். அது காலத்தின்கட்டாயமாகும். காலப்பொருத்தமற்ற அரசியலை யாராவது செய்தால் அதனால் மக்களுக்குத்தான் தீமைகள். மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அரசியலை யாரும் செய்யக் கூடாது. அது மாபெரும் குற்றமாகும். – என்றார்.(05)

# கடவுச்சீட்டு தரவரிசையில் இலங்கைக்கு 95 ஆமிடம்

2024 ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட கடவுச்சீட்டு தரவரிசையில் இலங்கை 95 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

இலங்கையுடன் ஈரான் மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளும் சுட்டெண்ணில் 95 ஆவது இடத்தைப் பிடித்துள்ளன.

லண்டனைத் தளமாகக் கொண்ட உலகளாவிய குடியுரிமை மற்றும் குடியிருப்பு ஆலோசனை நிறுவனமான ஹென்லி ரூ பார்ட் னர்ஸ் இத்தரப்படுத்தலை வெளியிடப்பட்டுள்ளது.

சமீபத்திய தரவரிசையின் படி, 44 நாடுகள் இலங்கைகடவுச்சீட்டைவைத்திருப்பவர்களுக்கு விசா இல்லாத பயணம் அல்லது விசா-ஒன்-அரைவல் ஆகியவற்றை வழங்கியுள்ள நிலையில், இலங்கை தரவரிசையில் முன்னேறியுள்ளது.

இலங்கை கடவுச்சீட்டு 2023 இல் 100 ஆவது இடத்திலும் 2022 இல் 102 ஆவது இடத்திலும் இருந்தது.

ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ், முன் விசா தேவைகள் இல்லாமல் நுழையக்கூடிய இடங்களின்எண்ணிக்கையின்அடிப்படையில் உலகளாவிய ரீதியில் கடவுசீட்டுகளை வரிசைப்படுத்துகிறது.

சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின்தரவுகளைப்பெறும்இந்ததரவரிசை, காலாண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்டு, பயணச் சுதந்திரம் மற்றும் உலகளாவிய போக்குகளில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிப்பதற்கானநம்பகரமானஆதாரமாக அமைகிறது. ஒக்ரோபர் புதுப்பிப்பு மற்ற குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கண்டது, பல நாடுகள் கூடுதல் விசா இல்லாத அணுகலைப் பெற்றன.

சிங்கப்பூர் தற்போது உத்தியோகபூர்வமாக உலகின் மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டாக உள்ளது, அதன் குடிமக்கள் உலகெங்கிலும் உள்ள 227 பயண இடங்களில் 195 பயண இடங்களுக்கு விசா இல்லாமல் செல்ல முடியும்.

இந்த முன்னொரு போதும் இல்லாத உலகளாவிய இயக்கம் ஹென்லி குறியீட்டில் சிங்கப்பூரின் முன்னணி நிலையை உறுதிப்படுத்தியுள்ளது, இது நாட்டின் இராஜதந்திர உறவுகளின் வலிமையையும் அதன் குடிமக்களுக்கு பயண சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கானஅதன்அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

சிங்கப்பூர்முன்னிலைவகிப்பதற்குமுன்னர் பல ஆண்டுகளாக முதலிடத்தில் இருந்த ஜப்பான், தற்போது பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயினுடன் உலக அளவில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

இந்தநாடுகளின்குடிமக்கள்விசாஇல்லாமல் 192 இடங்களுக்குச் செல்லலாம். ஜப்பான் இரண்டாவது இடத்திற்கு வீழ்ச்சியடைந்தது, கடவுச்சீட்டு தரவரிசையின் போட்டித் தன்மை மற்றும் குடிமக்களுக்கான பயண விருப்பங் களை விரிவுபடுத்த வலுவான இராஜதந்திர உறவுகளை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. செப்டம்பரில், டென்மார்க் சீனாவிற்கு விசா இல்லாத அணுகலைப் பாதுகாப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைஅடைந்தது, அதன்கடவுசீட்டு மூன்றாவது இடத்திற்கு தரமுயர்ந்துள்ளது.

டென்மார்க் தற்போது ஒஸ்திரியா, பின்லாந்து, அயர்லாந்து, லக்சம்பர்க், நெதர்லாந்து, தென் கொரியா மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகளுடன் மூன்றாவது இடத்தைப் பகிர்ந்து கொள்கிறது. இந்த நாடுகள் 191 இடங்களுக்கு விசா இல்லாத நுழைவை அனுபவிக்கின்றன, இது அவர்களின் நிலையான இராஜதந்திர உறவுகள் மற்றும் எல்லைகளைத்திறப்பதற்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

### ஷானி, ரவி ஆகியோர் மீது

# அவதூறு பரப்பியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்ஓய்வுபெற்றசிரேஸ்டபிரதிப்பொலிஸ்மா அதிபர் ரவிசெனிவிரட்ண சிஜடியின் முன்னாள் இயக்குநர் ஓய்வுபெற்ற சிரேஸ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் ஷானி அபயசேகர ஆகியோருக்குஎதிராகஅவதூறுசுமத்தியோருக்கு சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

டிஅல்விசின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அறிக்கையில் இருவருக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்ட நியாயமற்ற பரிந்துரைகளை அங்கீகரிப்பதற்கு காரணமானவர்களிற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள்எடுக்கப்படலாம்எனதகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் உள்நோக்கம் கொண்ட உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த அறிக்கையில் இருவருக்கும்எதிராகசமீபத்தில்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதை தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி ஏன் இந்த குழுவை அவசர அவசரமாக நியமித்தார் என்ற அதிர்ச்சி தரும் விவரங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்தும் அதன் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்கும் நோக்கிலும் இந்த ஆணைக்குழுவை எற்படுத்தவில்லை - மாறாக ஜனாதிபதி தேர்தலின் போது தன்னுடன் இணைந்து பணிபுரியுமாறு முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் பிரதானி விடுத்த வேண்டுகோளை ரவிசெனிவிரட்ண மறுத்தமைக்காக அவரை பழிவாங்குவதற்காகவே இந்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல்பிரசாரநடவடிக்கைகளில்முன்னாள் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ரவிசெனி விரட்ண நிரகரித்துவிட்டு தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதற்காக ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் அமைப்பை உருவாக்கினார்.

முன்னையஅரசாங்கத்தைஆதரிக்குமாறு அவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாஎன செனிவிரட்ணவிடம்கேள்விஎழுப்பியவேளை அவர் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

எனினும் தானும் ஷானிஅபயசேகரவும் தேசிய மக்கள் சக்தியில் இணைந்ததும் முன்னையஆட்சியாளர்கள்அதிருப்தியடைந்தார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதலில் ஈடுபட்டவர்களை காப்பாற்றுவதற்காகவே ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஜயஹி அல்விஸ் தலைமையிலான மூவர் கொண்ட குழுவை நியமித்தனர் எனத் தெரிவித்துள்ள செனிவிரட்ணவும் அபயசேகரவும் குற்றவாளிகளை கண்டறியும் நோக்கில் இந்த ஆணைக்குழுவை நியமிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

2024 ஜூன் 9 ஆம் திகதி மகரஹமவில் தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் நாங்கள் மேடைஏறினோம், உயிர்த்தஞாயிறுதாக்குதல் விசாரணைகளை எப்படி தொடர்ந்து வந்த தலைவர்கள் ஆட்சியாளர்கள் சீர்குலைத்தனர் என்பதை வெளிப்படுத்தினோம் என செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

(05)




# பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவருக்கு சொந்தமான சொத்துக்கள் முடக்கம்




இந்தியாவில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரருமான பழனி ஷிரான் க்லோரியன் என்பவருக்குச் சொந்தமான 8 கோடி ரூபா பெறுமதியுடைய சொத்துக்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன என குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

பழனி ஷிரான் க்லோரியன் என்பவருக்குச் சொந்தமாக வத்தளை பிரதேசத்தில் உள்ள சொகுசு வீடு மற்றும் கார் என்பன குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, பழனி ஷிரான் க்லோரியன் என்பவர் போதைப்பொருள் கடத்தல் மூலம் இந்த சொத்துக்களைச் சம்பாதித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, பழனிஷிரான்க்லோரியன் என்பவருக்குச்சொந்தமானசொத்துக்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. (05)

### வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கும்

# பணமோசடிக் குற்றச்சாட்டில் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதாக கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரிடம் பணமோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இளைஞன் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதாக கூறி 14 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டவர் , வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், அது தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின்பிரகாரம்விசாரணைகளை முன்னெடுத்தபொலிஸார் சாவகச்சேரி பகுதியில் வைத்து சந்தேகநபரை ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து, யாழ். நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை முற்படுத்தியவேளை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

## யாழ்ப்பாணத்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைகளின் அந்தநரித்தந்திரத்தைநீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களின் எடுபிடிகளுக்கு தகுந்த பாடம் கற்பிக்க நீங்கள் உறுதி எடுங்கள் என்றார்.

## தயாசிறியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வங்கியின் இங்கிரிய கிளையின் சுரேஷ் குமார என்ற நபரின் கணக்கில் பணத்தை வைப்பிலிடுமாறு தனது நண்பர்களுக்கு செய்தி அனுப்பப்பட்டுள்ளதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பணம் கேட்டு எவருக்கும் செய்தி அனுப்பவில்லை என்றும், அந்தக் கணக்கில் பணம் போட வேண்டாம் என்றும் தயாசிறி கேட்டுக் கொண்டார்.

ஒக்டோபர் 28, முஜிபுர் ரஹ்மானும் தனது வாட்ஸ்அப் கணக்கு ஹேக் செய்யப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் துறையிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானியாவில் குடியேறுவதற்கு விண்ணப்பித்த முதல் குடிசனம், இலங்கைத் தமிழர்களாகக்கருதப்படுகின்றனர். அவர்களின் விண்ணப்பம் கடந்த காலங்களில் பல தடவைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

தற்போது பிரித்தானிய ஆளும்தரப்பு தமது கொள்கையில் மாற்றம் செய்து, அவர்களைபிரித்தானியாவுக்குள்அனுமதிக்கத் தீர்மானித்திருப்பதாக அரசாங்க சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத்திட்டத்தின்கீழ்குற்றப்பின்னணிகள் எதுவும் இல்லாதவர்களின் குடும்பத்தினர் அனைவரும்நேரடியாக பிரித்தானியாவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இதற்கான உத்தியோகப்பூர்வ அறிவிப்பு எதிர்வரும் 2 நாட்களுள் வெளியாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக் கட்சியிடம் மட்டுமல்ல எவரிடமும் ஆதரவு கேட்கும் நிலை ஏற்படாது என்று ஜேவிபியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் பேச்சு நடத்தவில்லை. ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக தமிழ் அரசுக் கட்சி அறிவித்திருந்தது. சுமந்திரன் வெளிப்படையாக அதனை அறிவித்தார். அவர்கள் சஜித்துக்காகவே செயற்பட்டார்கள். அவரது வெற்றிக்காகவே உதவினார்கள்.

தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகின்றது. தமிழ் அரசுக் கட்சியும் போட்டியிடுகின்றது. அவர்கள் யாருக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று எமக்குத் தெரியாது. நாம் அவர்களுடன் கலந்துரையாடவில்லை. அவர்களின் நிலைப்பாடு குறித்து எனக்குத் தெரியாது.

அதேநேரம், நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவர்களின் உதவியை கோர வேண்டிய அவசியம் ஏற்படாது. நாங்கள் நாடாளுமன்றத்தில்அதிகமானஆசனங்களைக் கைப்பற்றுவோம். தமிழ்அரசுக்கட்சிமட்டுமல்ல எவரின் ஆசனத்தையும் கோரவேண்டிய நிலைமை ஏற்படாது என்றார்.

# மன்னாரின் அபிவிருத்தியில் கூடுதலான கவனம் தேவை

## பிரதமரிடம் மன்னார் ஆயர் வலியுறுத்து

மன்னார் மாவட்ட அபிவிருத்தியிலும் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் பரப்புரைக்காக தேசிய மக்கள் சக்தி கட்சியினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னாருக்கு வருகை தந்ததுடன், ஆயர் இல்லத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயரை சந்தித்து கலந்துரையாடிய போதே பிரதமரிடம் அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

மன்னார் மாவட்டம் பல துறைகளிலும் அபிவிருத்தியில் பின்தங்கிக் காணப்படுவதால் இம்மாவட்டத்தின் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்த வேண்டுமென்பது தொடர்பாகவும் மன்னார் தீவில் கனியவள மணல் அகழ்வு மற்றும் காற்றாலை அமைப்பதால் அப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி மந்தகதியில் காணப்படுவதால் ஏனைய மாவட்டங்களை நம்பியே இங்குள்ள நோயாளர்கள் காணப்படுவது தொடர்பாகவும் பிரதமரின் கவனத்துக்கு ஆயர் கொண்டு வந்தார்.

இவ்வாறு மன்னார் மாவட்டத்தின் பல தேவைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும் பிரதமரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆயர் உள்ளிட்ட குழுவினரால் முன்வைக்கப்பட்ட விடயங்களை கேட்டறிந்த பிரதமர், அவை தொடர்பாக கவனத்தில் எடுத்துக் கொள்வதாக பதிலளித்தார்.

பிரதமர் ஆயர் இல்லம் வந்திருந்தமையின் ஞாபகார்த்தமாக மருதமடு அன்னையின் திருச்சுரூபமும் பிரதமருக்கு ஆயரால் வழங்கி வைக்கப்பட்டது. இச்சந்திப்பில் மன்னார் மறைமவாட்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், மடு பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், குடும்ப பொது நிலைய பணியக இயக்குநர் அருட்பணி இ.அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார், முன்னாள் குருமுதல்வர் ஏ.விக்ரர் சோசை அடிகளார், மூத்த அருட்பணியாளர் எஸ்.எமிலியாணுஸ்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# வீதி விபத்தில் ஒருவர் காயம்



ஹொறணை – களுத்துறை வீதியில் 16ஆவது கிலோ மீற்றர் மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த ஓட்டோவுடன் மோதியதில் ஓட்டோ வீதியை விட்டு விலகி அருகிலிருந்த சுவரில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது, ஓட்டோவின் சாரதி காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)

# ஐஸ்லாந்து சுற்றுலாவிகள் முதல் தடவையாக வந்தனர்



முதல் முறையாக ஐஸ்லாந்திலிருந்து சுற்றுலாப் பயணிகள் குழு ஒன்று நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

இந்த சுற்றுலாப் பயணிகள் குழு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 08.33 மணியளவில் டுபாய் எமிரேட்ஸ் ஈகே 650 விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

24 பேரை கொண்ட இந்த சுற்றுலாப் பயணிகள் குழு 14 நாள்கள் நாட்டில் தங்கியிருக்கவுள்ளனர்.

இந்த சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, ஹபரனை, கண்டி, சிகிரியா, பெந்தோட்டை மற்றும் எல்லை ஆகிய பிரதேசங்களில் உள்ள சுற்றுலாத் தளங்களைக் கண்டுகளிக்கவுள்ளனர். (05)



# கேப்பாப்புலவுக் காணிகளை விடுவித்து தருமாறு பிரதமரிடம் மகஜர் கையளிப்பு



முல்லைத்தீவுகேப்பாபுலவுகாணிகளைவிடுவித்து தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி திங்கட்கிழமை மாலை புதுக்குடியிருப்பில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் ஹரிணி அமரசூரியவை கேப்பாப்புலவு மக்கள் சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு - கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளினை மீட்டுத் தருமாறு கோரிய தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை வடமாகாண ஆளுநர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கடந்த மாதம் ஒப்படைத்திருந்தனர்.

அதனையடுத்துதிங்கட்கிழமைமுல்லைத்தீவு மாவட்டத்தின்புதுக்குடியிருப்புபிரதேசத்தில்தேசிய மக்கள்சக்தியின், 'நாட்டைக்கட்டியெழுப்பும், நாம் ஒன்றாக திசைகாட்டிக்கு' எனும் கருப்பொருளில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பொதுக்கூட்டம் புதுக்குடியிருப்பு தனியார் பஸ் நிலைய வளாகத்தினுள் நடைபெற்ற நிலையில் அக்கூட்டத்தில் சிறப்பு அதிதியாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து கொண்ட நிலையில் கேப்பாபுலவு காணி விடுவிப்பு தொடர்பில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மக்கள் கையளித்திருந்தனர்.(05)





## பாதுகாப்பை குறைத்துவிட்டனர் என்னை கொலைசெய்யும் முயற்சி இடம்பெறலாம்

### சந்திரிகா சந்தேகம்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தன்னை கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறலாம் என அச்சம் வெளியிட்டுள்ளார்.

பொதுமக்கள்பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் ரவிசெனிவிரட்ணவிற்கு எழுதியுள்ளகடிதத்தில்அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளில் தான் மாத்திரம் கொலைமுயற்சியை எதிர்கொண்டவர் என்றபோதிலும் ஏன் ஏனைய ஜனாதிபதிகளிற்கு 100 முதல் 240 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வழுங்கியுள்ளீர்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலைப்புலிகளால் தான் எதிர்கொண்ட அச்சுறுத்தல்களை சுட்டிக்காட்டியுள்ள அவர், ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களை தான் எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளிற்கு பாதுகாப்பைகுறைக்கும்அரசாங்கத்தின் முடிவு குறித்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (05)

## திருமலையில் நவம்பர் 7 16 மணிநேர நீர் வெட்டு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அவசர திருத்த வேலை காரணமாக எதிர்வரும் 07 ஆம் திகதி அன்று காலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை குடிநீர் விநியோகத் துண்டிக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் எல்.சுபாகரன் தெரிவித்தார்.

குறித்த நீர் வெட்டானது திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப் பகுதியிலும் குச்சவெளி பிரதேச செயலக பகுதியின் இறக்கக் கண்டி பாலம் வரையான பகுதியிலும் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், இதனால் முன் கூட்டியே போதுமான நீரை சேமித்து வைக்குமாறும் மேலும் தெரிவித்தார்.

இதன் மூலம் ஏற்படும் தடங்களுக்கு பாவனையாளர்களுக்கு தங்களது வருத்தத்தையும் தெரிவிக்கின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.11.2024இல் வெளியிடப்பெற்றது